★ அடாது செய்யும் ஆட்சி படாது படும் ★

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (15—6—50) வெளியூர் (16—6—50) [இதழ் 279

உழைப்பாளர் உரிமையை பறிக்கும் மசோதாக்கள் ஒழியட்டும்

ஆக்க பணிபுரிவோர் மீது - - அடக்குமுறையை வீசுவது அநீதி

.........(—).........

நாட்டுப் பிரிவினையில் நாட்டம் செலுத்துக!

———(...)———

கன்னித் தமிழிடுக்க கட்டாய இந்தி ஏன்?

மதுரை மாநாட்டுத் தீர்மானங்கள்

ஜனநாயக வரம்பை மீறாமல், ஆக்கவேலைகளில் ஈடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அரசியலார் அடுத்தடுத்து அடக்குமுறைகளை வீசுவதைக் கண்டித்தும், தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் முறையில் இந்திய அரசியலார் கொண்டுவந்திருக்கும் தொழில் உறவு மசோதாக்களைக் கைவிடும்படி கோரியும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வற்புறுத்தியும், கட்டாய இந்தியை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1-ஏ. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை கோட்பாடுகளும், அதற்கான பிரசார வகைகளும் நாட்டின் ஆக்கத்திற்கோ அன்றி அமைதிக்கோ எவ்வகையிலும் மாறுபாடானதாயில்லாததோடு, மக்களிடையே துவேஷம், பலாத்காரம் ஆகியவைகளை அறவே ஒழிக்கத்தக்கதாயிருந்தும்கூட, இன்றைய அரசியலார் கழகத்தின் மீது—குறிப்பாக இயக்கப் பிரச்சாரம், புத்தக வெளியீடு, நாடகம், பத்திரிகைகள் ஆகியவைகளு குத்தடை விதித்தும், வழக்குதொடுத்தும் தங்களது வீணான அடக்குமுறைகளை கையாண்டு, மக்களின் நியாயமான உரிமைகளைப் பறிப்பதை, இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

பி. அரசியலாரின் இத்தகைய முறை மேலும் வளருமானால், தாங்களாகவே நாட்டின் அமைதிக்கும், ஜனநாயக வளர்ச்சிக்கும் அழிவு தேடும் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்பதை அரசியலாருக்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கிறது.

முன்மொழி: என். எஸ். இளங்கோ.

வழிமொழி: கே. கே. நீலமேகம்.

2. இப்பொழுது பம்பாயில் இருக்கும் ரெயில்வே மத்திய சர்விஸ் கமிஷனை உடனே சென்னைக்கு மாற்றியமைக்கும்படி இம்மாநாடு ரெயில்வே போர்டை கேட்டுக்கொள்வதுடன், பம்பாயைவிட சென்னை இந்த உபகண்டத்தின் மத்தியில் இருப்பதாலும், சென்னையில் விலைவாசிகள் பம்பாயைவிட மலிவாக இருப்பதாலும், வேலைக்கு மனு செய்வோர் தொல்லைகள் இல்லாமல் வசதியாகப் போய் வர முடியும் என்பதை இம்மாநாடு எடுத்துக்காட்டுகிறது.

முன்மொழி: பொன்மலை—பராங்குசம்.

வழிமொழி: டி. கே. சீனிவாசன்.

3. சென்னை மாகாணத்தில் பல ஆண்டுகளாய் அமுலிலிருந்துவரும், திராவிடத்தின் பெரும் பான்மையான சமூகத்தினரின் முன்னேற்றத்திற்கும், குறிப்பாக பிற்பட்ட வகுப்புகளின் நலனுக்கும் ஆக்கமளித்து வருவதுமான வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமுறையை மேலும் நீடித்து வரவேண்டுமென்று தீர்மானித்த, சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் குழுவினர்க்கு, இம்மாநாடு தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

முன்மொழி: கே. ஏ. மதியழகன்.

வழிமொழி: இராசு தங்கப்பழம்.

4. தொழிலாளர் உரிமையைப் பறிக்கும் முறையில், இந்திய சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கும் தொழில் உறவு மசோதாக்களை நாட்டின் ஜீவநாடிகளான பாட்டாளி மக்களின் நலனையும் தொழில் வளர்ச்சியையும் கருதி, உடனடியாகக் கைவிடவேண்டுமென்று இம்மாநாடு மத்திய அரசியலாரையும், தொழில் மந்திரி தோழர் ஜெ ஜீவன்ராம் அவர்களையும் வற்புறுத்துகிறது.

முன்மொழி: சி. பி. சிற்றரசு

வழிமொழி: எஸ். முத்து.

5. இனத்தாலும், கலை, நாகரீகம், வரலாறு ஆகிய அனைத்திலும் திராவிடம் தனித்தியங்குவதாலும் அரசியல்துறையில் திராவிடநாடு வேறெந்த நாட்டின் எவ்வித ஆதிக்கத்திற்கும் உட்பட்டிராத சுதந்திரத்துடன் விளங்க வேண்டுமென்ற உரிமையினாலும், மொழி, வரலாறு மேம்பாடுகளினாலும் கூட இந்தி மொழி, திராவிட நாட்டின் பொதுமொழியாகவோ அன்றி அரசியல் மொழியாகவோ இருப்பதற்குத் தகுதியில்லை. ஆதலால் பொதுமொழி என்ற பேரில் பள்ளிகளில் கட்டாய பாடமாக இந்தியைப் புகுத்துவதை, இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முன்மொழி: என். வி. நடராசன்.

வழிமொழி: ராமாமிருதம்மையார், எம். எஸ். சிவசாமி.

"காங்கிரஸ் ஆட்சி ஒழிக" என கூறுவது குற்றமாகாது

போலீசார் சாட்சியை நம்புவதற்கில்லை

கல்கத்தா மாகாண மாஜிஸ்ட்ரேடின் நல்ல தீர்ப்பு

கல்கத்தா, ஜூன் 13—

"காங்கிரஸ் ஆட்சி ஒழிக" என்பது போன்ற எதிர்ப்பு ஒலிகளை எழுப்புவது, சட்ட விரோதமான செய்கை ஆகாது" என்று, கல்கத்தா மாகாண மாஜிஸ்ட்ரேட் தோழர் எஸ். ஜி. குமார், 7 வங்க இளைஞர்கள் மீது தொடரப்பட்டிருந்த ஒரு வழக்கில், தீர்ப்புக் கூறுகையில் குறிப்பிட்டார்.

சென்ற பிப்ரவரி 3-ம் தேதி வங்க சட்டசபை மண்டபத்தின்முன், சட்டவிரோதமான கூட்டங் கூட்டி, சர்க்காருக்கு விரோதமான எதிர்ப்பு ஒலிகளை எழுப்பினர் என்பதே எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றமாகும்.

மாஜிஸ்ட்ரேட் தமது தீர்ப்பில், "பிராசிகியூஷன் இவ்வழக்கில் ஒரேஒரு சாட்சியை, அதுவும் ஒரு போலீஸ் சார்ஜன்டையே விசாரித்திருக்கிறது. எதிரிகள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள் என்று அந்த சாட்சி கூறுவது நம்பத்தக்கதல்ல, ஏனெனில், இச்சம்பவம் நடந்த கொஞ்ச தூரத்தில் இரு எதிரிகளை மாத்திரம் அவர் கைது செய்திருக்கிறார். அந்தக் கூட்டம் சட்டவிரோதமானது என்று கருதியுள்ள அதிகாரிகள் யாரும் பிரகடனம் செய்யவில்லை. மேலும் எல்லா எதிரிகளும் எதிர்ப்பு ஒலிகளை எழுப்பினர் என்று பிராசிகியூஷன் தரப்பு சாட்சி திட்டமாகக் கூறவில்லை. எனவே, எதிரிகள் குற்றவாளிகளல்லர் என்று கூறியுள்ளார்.

வங்க நீதிபதியின் இந்நல்ல தீர்ப்பை, இம் மாகாண ஆட்சியாளருக்கு அர்ப்பணம் செய்கிறோம்.

———

லண்டன், ஜூன் 14—

இந்தியாவிலுள்ள இருபிரிட்டிஷ் கம்பெனிகளுக்காக 600 டன் பட்டுக்கள் டைன்ஸைட் கம்பெனி ஒன்றால் தயாரிக்கப்படவிருக்கிறது.

ஸெரட்ஸே காமாவுக்குப் பதவி?

லண்டன், ஜூன் 14—

லண்டன் - விருன்ஸ் காலனி காரியாலயத்தில் ஒரு அதிகாரியாக, ஸெரட்ஸே காமாவுக்கும் பதவி கொடுப்பது பற்றி யோசிக்கப்பட்டு வருவதாக, புரானல் லார்திலிருந்து கிடைத்துள்ள செய்தி ஒன்று கூறுகிறது.

காலனி ஆபீசிலும், காமன்வெல்த் உறவு ஆபீசிலும் இதைப்பற்றிய எவ்விதத் தகவலும் தெரியவில்லை.

ஆனால் இம்மாதிரிப் பதவிக்கு செரட்ஸே காமா மனுப்போட்டால் கிடைக்கலாம் என்று தெரிகிறது. காமாவும் ஒரு உத்யோகத்தைத் தேடுவதில் சிரத்தையுள்ளவராக இருப்பதாகத் தெரிகிறது.

———

பாக்தாத், ஜூன் 14—

மூன்று ஆண்டுகளுக்கு முன், சோவியத் ஆர்மோனியாவில் இராக்கிலிருந்து குடியேறிய ஆர்மோனியர்கள் இராக்கிற்குத் திரும்பி வந்துவிட விரும்புகின்றனர்.

லண்டனில் மீண்டும் இந்திய வர்த்தகசபை

லண்டன், ஜூன். 14—

யுத்தம் காரணமாக லண்டனிலிருந்து எடுபட்டுவிட்ட இந்திய வர்த்தக சபை, மீண்டும் லண்டனில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இதன் தலைவர் தோழர் கே. டி. மேத்தா, இதன் கௌரவ காரியதரிசி தோழர் டி எம் கோகுல்தாஸ் முன்பிருந்த வர்த்தகசபையைவிட இன்னும் விரிவான நோக்கத்துடன் இப்புது சபை சேவைசெய்யும்.

பிரிட்டனிலும், ஐரோப்பா கண்டத்திலுமுள்ள இந்தியரல்லாத ஸ்தாபனங்களும் 'அஸோஸியேட்' மெம்பராக சேரலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் எல்லா நாடுகளுக்கும் வேண்டிய சேவைகளை இந்தப் புது சபை செய்ய உத்தேசித்திருக்கிறது.

———

ஜார்டனை அரபு லீக் வெளியேற்றுதாம்

லண்டன், ஜூன் 14—

அரபுலீக் கவுன்ஸில், ஜார்டனை லீகிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்கிற எகிப்து தீர்மானத்தை, அரசியல் கமிட்டிக்கு விட்டுவிட்டதை இராக்கிற்கு ஏற்பட்ட வெற்றி என்று இங்கு கருதப்படுகிறது.

நேபாள முடிமன்னனின் எதேச்சாதிகாரம்

————(0)————

எதிர்த்து பட்டினி கிடந்த காவல்கைதி மரணம்

பாட்னா, ஜூன். 13—

கத்மண்டு சிறையில், அரசியல் கைதிகளின் உரிமைக்காக, உண்ணாவிரதமிருந்த காங்கிரஸ் உறுப்பினரான சுவாமி சங்கரானந்தர் தனது 12-வது நாள் உண்ணாவிரதத்தன்று உயிர் துறந்தார்.

சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை, மனிதத் தன்மையோடு நடத்தவேண்டும். உறவினரைக் காணும் வசதி அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்; நல்ல உணவு படிக்கப் புத்தகங்கள் தரப்படவேண்டும் என்பவைகளே அவரது கோரிக்கைகள். இக் கோரிக்கைகளுக்கு அரசியலார் செவிசாய்க்க மறுத்த காரணத்தாலேயே, அவர் உண்ணாவிரதமிருந்து உயிர் தியாகம் செய்தார்.

சங்கரானந்தர் இறந்ததை யொட்டி, ஆட்சியாளரின் வன்நெஞ்சப் போக்கைக் கண்டித்து, காங்கிரஸ் ஊழியர் ஒரு ஊர்வலம் நடத்தி[illegible] அவர்களில் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

தோழர் சங்கரானந்தரைப் பின்பற்றி உண்ணாவிரதமிருந்து வரும் வேறு சிலருடைய நிலையும், கவலைக்கிடமாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

மாலை மணி

சென்னை 15—6—50 வியாழக்கிழமை

விண் பகட்டு வேண்டாம்!

பூசனிக்காயின் வெளித் தோற்றம், அதன் உள் தோற்றத்தின் எதிரொலியாக எப்பொழுதுமிருப்பதில்லை!

பசுமையும், பருமனும், பளபளப்பும், மினுமினுப்பும் அதன் வெளித்தோற்ற வடிவிலே நின்று கண்கவரும் தன்மையனவாக விளங்கும். ஆனால் அதை உடைத்துப் பார்க்கும்போது, அது அழுகிப் போனதாய், நாற்றம் வீசுவதாய் இருக்கும்! உள்தோற்றத்தை வெளித்தோற்றம் மறைத்துக்காட்டும் வெளிப்பகட்டாகவே இருக்கும்! இந்த வெளிப்பகட்டுத்தன்மை, பூசனிக்காயிடம் இயற்கையாய் அமைந்திருப்பதை யாவரும் காணலாம்!

பூசனிக்காயைப் போன்று இந்த வகையில் வேறொன்றைக் காணவேண்டுமானல், அதற்குச் சரியான எடுத்துக்காட்டு காங்கிரஸ் அரசாங்கந்தான்.

காங்கிரஸ் அரசாங்கம், உள் ஊழல்களைப்பற்றிக் கவலைப்படாமல், வெளிப்பகட்டின் மூலமே வாழ்நாளைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டு வருகின்றது என்பதைப், பல்வேறு வாய்ப்புக்களின் போது எடுத்துக் காட்டி வந்துள்ளோம்.

உள்ஊழல்களை நீக்குவதற்கான முயற்சிகளை ஒரு பக்கம் மேற்கொண்டு, மற்றொரு பக்கம் வெளிப்பகட்டின் மூலம் செயலாற்றி வருவதானலும், அப்படிப்பட்ட முறையை யாரும் குறைகூற முன்வரமாட்டார்கள் — அரசியல் தந்திரங்களிலே ஒன்று என்று கூட இருந்து விடுவார்கள்.

ஆனால், இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் அரசாங்கம், உள்நாட்டின் ஊழல்களைப்பற்றிக் — குற்றங்குறைகளைப்பற்றி — வாழ்வுக்கான வசதியின்மை பற்றி எள்ளளவும் அக்கரை எடுத்துக்கொள்ளாமல், அகில உலகத்தின் முன், தன்நாடு ஒரு பெரிய வளமான, சிறந்த வல்லரசாகும் என்பதைப், போலிப் பெருமைகளால் காட்டிக் கொள்வதிலேயே, கண்ணேட்டம் செலுத்துவதாக இருந்து வருகிறது.

இந்திய துணைக் கண்டத்தைப் பற்றி வெளியுலக நாடுகள் பெருமையாகக் கருதி மதிக்க வேண்டும் என்பதற்காக, இந்திய அரசாங்கத்தால் செயல்கள் புரியப்படுகின்றன. அது தவறு என்று கூற நாம் வரவில்லை. இந்தியாவைப் பற்றி வெளி நாடுகளின் நினைப்பு ஒரு மாதிரியாகவும், இந்தியாவின் நிலை அதற்கு நேர்மாறான வேறு மாதிரியாகவும் இருக்கக் கூடாது என்பதே, நமது உட்கிடக்கை. வெளி நாட்டாரிடம் ஏற்படுத்த விரும்பும் நினைப்புக்கேற்றபடி, உள்நாட்டின் நிலைமையும் திருத்தியமைக்கப் பாடுபடுவதே நேரிய முறையாகும்.

ஆனால், இந்திய அரசாங்கமோ, உள்நாட்டில் நிலவும் வறுமை, பசி, பட்டினிச் சாவு, தொழிலின்மை, வேலையில்லாத் திண்டாட்டம், பாசீச ஆட்சி, சர்வாதிகார அதிகாரம், மேல் ஜாதி ஆதிக்கம், அடக்குமுறைத் தாண்டவம், கல்வியறிவின்மை, பெண்களின் தாழ்நிலை, சமுதாயத்தின் பிற்போக்கான நிலை ஆகியவைகளைப் போக்கவழியேதும் காணுமல், இவைகளெல்லாம் இந்தியா நல்ல முறையிலே இருந்துவருகிறது என்பதைக் காட்டிக்கொள்ளப் பெருமுயற்சியெடுத்துவருகிறது. இது வெறும் வெளிப்பகட்டு ஆகுமே யொழிய உள்ள நிலையை உள்ளபடியே எடுத்துரைத்த நிலையாகாது என்கிறோம்.

ஒரு தாஜ்மஹாலையும், ஒரு காந்தியாரையும், ஒரு விஜய லட்சுமி பண்டிட் தூதுவரையும், ஒரு சரோஜினி நாயுடு கவர்னரையும், ஒரு ராஜகுமாரி அமிர்த கௌரி மந்திரியையும் ஆடம்பரச் செலவுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களையும், அவர்களில் ஒருவருக்கு ஒன்பது கார்களையும், வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கு வைக்கும் தோட்டக் கச்சேரிகளையும் காட்டி, இந்தியாவின் மொத்தமதிப்பைக் கணக்கிடும்படி செய்கிருர்களேயன்றி, அவைகளின் — அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படியாக்கி, உள்ளபடியே நாட்டின் நிலையை உயர்த்தவேண்டும் என்ற எண்ணம் எங்கே ஆளவந்தார்களிடம் பிறந்திருக்கிறது? இதை நாம் கேட்கிறோம் என்ற காரணத்தால் தேசியத்தோழர்கள் பலருக்குச் சினமும், சீற்றமும் பொங்கி எழக்கூடும். இதைக் காங்கிரஸ் மந்திரிகளிலே ஒருவர் — அதுவும் மத்திய அரசாங்க மந்திரிகளிலே ஒருவர் — அதுவும் அண்மையில் அமைச்சர் பீடம் ஏறியவர் ஒருவர் கூறுகிறுரென்ருல், இதைவிடவேறு சான்று என்ன வேண்டும்?

காங்கிரஸ் தலைவர்களிலே சிலர், சில சமயங்களிலே, உணர்ந்தோ, உணராமலோ உண்மைக் கருத்துக்களைக் கொட்டிவிடுகின்றுர்கள். இது காங்கிரஸ்காரர்கள் எல்லோர்க்கும் பழக்கமில்லாததொன்று என்றுலும் அத்தி பூத்தது போல், அதிசயமாய்ச் சிலர் சில மொழிந்துவிடுகிருர்கள். அந்தச்சிலரின் வரிசையிலே இந்தியாவின் கைத்தொழில் — சப்ளை மந்திரி தோழர் ஹரிகிருஷ்ண மேதாப் இப்பொழுது வந்து நிற்கிருர்!

தோழர் மேத்தாப் பம்பாய் வர்த்தகர்கள் சங்கம் ஒன்றில் பேசும்போது, இந்திய அரசாங்கம் கொண்டிருக்கும் வெளிப்பகட்டுத் தன்மையை உணர்த்திக் காட்டியிருப்பதோடு, அரசியல் தலைவர்கள் பணியாற்றுவதைவிட உபதேசம் புரிவதையே பெரும்பான்மையாகக் கொண்டிருக்கிருர்கள், அந்த முறை அறவே ஒழியவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிருர். அவர் கூற்று இதோ:—

"மற்றவர்களுடைய விவகாரங்கள் பற்றிப் பேசுவதில் நாம் தனி மகிழ்ச்சிக் கொள்கிறோம். இந்த நாட்டில்யாரைப் பார்த்தாலும் உபதேசம் புரிபவர்களாகவே காணப்படுகிருர்கள். உபதேசம் புரிவது என்பது இந்த நாட்டில் சர்வ சாதாரணமாகிவிட்டது. நமது நாடு உள்பகுதியில் எந்த நிலையிலிருக்கிறது என்பதைவிட, அயலே உலக நிலையில் எப்படியிருக்கிறது என்பதை அறிவதிலேயே ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த முறை அறவே நீங்க வேண்டும். நாம் நம்முடைய அடிப்படையான தாழ் நிலையில் நின்று உலகைக்காண முற்படவேண்டும்." என்பதாகும்.

உபதேசம் புரிவது என்பது நாட்டில் சர்வ சாதாரணமாகிவிட்டது என்று அவர் கூறுவது, காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க உண்மையாகும். இந்தோனேஷியாவில் தோழர் நேரு ஆற்றும் சொற்பொழிவுகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இங்கு நடப்பதொன்று; அங்கு அவர் சித்தரிப்பதுவேறு! இந்தியக் 'குடியரசு' தலைவர் தோழர் ராஜேந்திரபிரசாத்திலிருந்து, கடைசி காமராஜர் வரையில் உபதேசம்புரிவதுதான் பெரும்பணி என்று எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். தோழர் காமராஜர் தம்முடைய உபதேசத்தை மக்கள் அப்படியே நம்பவேண்டும் என்பதோடு, பிறக் கட்சிக்காரர்கள் கூறுவனவற்றை, அவை எவ்வளவு உயரிய, நல்ல, உண்மையான தேவையான கருத்துக்களாக விளங்கின போதிலும், அவற்றை எக்காரணங்கொண்டும் மக்கள் நம்பக்கூடாது என்றும், கூறி வருகிருர். உபதேசம் புரிவதையே அவர் 'அருமருந்தாக'க் கொண்டிருக்கிருர். உபதேசம் என்ருல், அவர் அகராதிப்படி வெறும் 'வசைமாரி'தான்! தோழர் காமராஜர் போன்ருரின் வசைமாரி உபதேசங்களையும், தோழர் ராஜேந்திரபிரசாத் போன்ருரின் வாய்மொழி உபதேசங்களையும் கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்டக் காரணத்திலோ, என்னவோ, தோழர் ஹரிகிருஷ்ணமேதாப் "உபதேசம் என்பது விலைமலிவாகி விட்டப் பொருளாகிவிட்டது" என்று கூறுகிருர்.

மேலும், தோழர் மேதாப் இன்று அமுலாக்கப்பட்டிருக்கும் இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வெறுப் வெளிப்பகட்டைக் கொண்டது என்றும், முரண்பாடுகளை உடையது என்றும், உரிமைகளையெல்லாம் பறித்திருப்பது என்றும் கூறுகிருர், இத்தகைய கருத்துக்களை ஒரு காங்கிரஸ்காரரிடமிருந்து அதுவும் ஒரு மத்திய சர்க்கார் மந்திரியிடமிருந்து எதிர்பார்ப்பது என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமான தேயாகும். மேலும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஊழல்களை, அமைச்சர் ஒருவரே எடுத்து விளம்புவது என்பது, மிக்க வலிவுடையதொரு கருத்து அல்லவா? அவர் கூற்றை அவர் வாய்மொழியாலேயே கேளுங்கள்,

"எல்லாவித உரிமைகளையும் கொடுப்பதாக நம்பப்படுகிற அரசியல் அமைப்பை, நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்டுள்ளோம் என்று கூறிக்கொள்வதில், நாம் தனிப்பெருமையடித்துக்கொள்கிறோம். இது வீண் டம்பப்பேச்சிலே இறங்கும் முறையாகும். அரசியல் அமைப்பு முறைக்கு ஏற்ப நம்மால் ஒத்திட்டு வாழ முடியவில்லையானல், அரசியல் அமைப்பு, நமக்கு ஒரு பயனையும் தாராது. நமக்கு நாமே அரசியல் அமைப்பை வகுத்துக் கொண்டோம் என்ருலும், பலவித முரண்பாடுகளை அதில் கொண்டுள்ளோம். அரசியல் அமைப்புச்சட்டம், ஒரு பக்கத்தில் ஏராளமான உரிமைகளை வழங்குகிறது; ஆனல் பிறகு செய்யப்பட்ட சட்டங்களில் சிலபல உரிமைகளைப் பிடுங்கிக் கொண்டுவிட்டன" என்பதாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், மக்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டமாக இருக்கிறது என்று, முற்போக்குக் கட்சியினர் எடுத்துக் கூறும்போது, சீறிப் பாய்ந்த தேசியத் தோழர்கள், தோழர் மேதாப் சுட்டிக் காட்டும்போது என்ன செய்வார்களோ, தெரியவில்லை!

இந்திய நாட்டைப் பற்றியும் அரசியல் அமைப்பைப் பற்றியும் ஆட்சி முறையைப் பற்றியும் வெற்றுரை கூறி, வீண் பெருமை தேடிக்கொள்ள முயலும் தேசிய தோழர்களுக்கு, தோழர் ஹரிகிருஷ்ண மேதாப் கூறும் "வீண் பகட்டு வேண்டாம்!" என்ற சொற்களையே காணிக்கையாகவைக்கிறோம், கண் திறந்து பார்ப்பார்கள் என்ற எண்ணத்துடன்.

பாடுபட்டுப் பணந் தேடவேண்டுமாம்

லண்டன், ஜூன் 14—

அமெரிக்கர்கள் ஏன் அவ்வளவு பாடுபட்டு உழைக்கிருர்கள் என்பதன் காரணத்தை, யுனைடெட் ஸ்டேட்ஸுக்குச் சென்றுள்ள பிரிட்டிஷ் என்ஜினியரிங் கோஷ்டியினர் கண்டு பிடித்திருக்கின்றனர்,

அமெரிக்கர்களின் மனைவிகள் கேட்கும் தானகவே வெளுக்கும் இயந்திரம், மோட்டார் கார், டெலிவிஷன்ஸெட் இவைகளை எல்லாம் வாங்கித் தரவே அமெரிக்கர்கள் அதிகம் சம்பாதிக்கவேண்டியிருக்கிறதாம்.

இதைப்பற்றி கேள்விப்பட்டுள்ள பிரிட்டிஷ் மனைவிகள், தங்கள் புருஷர்களையும் பாடுபட்டு வேலைசெய்து பணம் சம்பாதிக்கும்படி வற்புறுத்திவருகின்றனராம்.

இந்தோனேஷ்ய வர்த்தக வளர்ச்சி

லண்டன் ஜூன், 14—

இந்தோனேஷ்யாவின் வர்த்தகம் மிகவும் அபிவிருத்தியடைந்து வருவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. 1949-ல் இறக்குமதியும் ஏற்றுமதியும் அதிகரித்திருக்கிறது. இவ்வருஷமும் வர்த்தகம் அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கிறது.

நிறத்திமிருக்கு மண்டையில் அடி

.....................(: - :)....................

உணவருந்தும் இடங்களில் நீக்ரோக்களுக்கும் இனி இடம்

————————(ர)————————

அமெரிக்க சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு

நியூயார்க், ஜூன் 14—

யுனைடெட் ஸ்டேட்ஸில், தென் பகுதிகளில் ஓடும் ரயில் வண்டிகளிலுள்ள உணவருந்தும் இடத்தில் வெள்ளையர்களுக்காக தனி இடம், நீக்ரோக்களுக்காக தனி இடம் என்றிருந்த வழக்கம், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு விளைவாக, இனி எடுபட்டுவிடும்.

நீக்ரோக்கள், இனி வெள்ளையருக்கென்று ஒதுக்கிய இடத்திலும் உட்கார்ந்து உணவருந்தலாம்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் அதிகாரியான நீக்ரோ எல்மர் ஹெண்டர்ஸன், சர்க்கார் அலுவலைபொட்டி அலாபாமாவுக்கு ரயிலில் சென்ருர். அவர் உணவருந்தும் வண்டியில் ஏறியதும், அவருக்கு இடம் இல்லை என்று சொல்லப்பட்டது. காலியாக இருந்த ஸ்தானங்களை அவர் சுட்டிக்காட்டி, இடம் இருக்கிறதே என்று கேட்டபோது, இது வெள்ளையருக்கான பிரத்யேக இடம் என்றும், நீக்ரோக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் இடம் காலியில்லை என்றும் அவரிடம் விளக்கிக் கூறப்பட்டது.

இந்த நிறத்திமிரை ஒழித்தாகவேண்டும் என்று கருதி, அவர் சுப்ரீம் கோர்ட் முன்பு இவ்விஷயத்தைக் கொணர்ந்தார். சுப்ரீம் கோர்ட் அவருக்குச் சாதகமாகவே தீர்ப்பளித்தது.

செஞ்சீனவுடன் திபேத் உறவு

புதுடில்லி, ஜூன். 14—

செஞ்சீன திபேத் எதிர்கால உறவு பற்றி பீகிங் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பப்பட்ட திபேத் சர்க்காரின் தூது கோஷ்டியினர், ஹாங்காங் செல்ல பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதி மறுத்திருக்கின்றனர்.

அடுத்தபடியாக என்ன செய்வது என்பது குறித்து தாங்கள் தலாய் லாமாவின் உத்தரவை எதிர்பார்ப்பதாக, அந்த தூதுகோஷ்டி மெம்பர்களில் ஒருவர் கூறினர். [illegible] [illegible] தங்கியிருப்பார்களென்று [illegible] நம்பப்படுகின்றது.

அயருக்கு இந்திய தூதுவர்

டப்லின், ஜூன். 14—

அயருக்கு இந்திய தூதுவரான தோழர் கிருஷ்ணமேனன், ஜூலை மாதத்தில் இங்கு விஜயம் செய்யவிருக்கிருர்.

அயர் பிரதம மந்திரி தோழர் காஸ்டெல்லோ, எவ்வளவோ விஷயங்கள் பற்றி முக்யமாக இந்தியா—அயர் வர்த்தகம் பற்றி இந்தியத் தூதருடன் பேச உத்தேசித்திருக்கிருர். ஆனல், இந்தியத் தூதருக்கும் ஓய்வொழிவில்லாமல் முக்ய அலுவல்கள் இருந்து வந்திருக்கின்றன.

மெக்கா, ஜூன் 14—

ஹஜ்யாத்திரை செல்லும் யாத்ரீகர்களுக்கு, இனிஐஸ் கிடைக்க வழி செய்யப்பட்டுவிட்டது. ஒரு தினத்திற்கு 2 டன் ஐஸ் உற்பத்தி செய்யும் சாதனம் இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

லூயி மன்னன் ஆட்சி மறைந்த விதம் நினைவில் இருக்கட்டும்!

(0)

அறிவுப்பணி புரிவோரை அடக்க முயல்வது ஆபத்தானது

(0)

இன்று நம்மைத் தூற்றுவோரெல்லாம் போற்றுங்காலம் அண்மிவிட்டது

(...)

மாநாடுகளே எங்களுக்குக் கல்லூரி; மக்களே மாணவர்கள்

மதுரை மாநாட்டில் தோழர்கள் முழக்கம்

சோழவந்தான்,
ஜூன், 11—

சோழவந்தானில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி. மு. கழக முதலாவது மாநாட்டில் பேசிய தோழர்கள் என். வி. நடராசன், டி. கே. சீனிவாசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோரின் பேச்சு வருமாறு:—

என். வி. நடராசன்

இன்றைய சர்க்கார் இந்தியைக் கட்டாய பாடமாக புகுத்தினர். நாம் அதைப் பலமாக எதிர்த்ததன் பலனாக, கொஞ்சம் அந்தக் கொள்கையைத் தளர்த்தினார்கள். ஆனால், மீண்டும் இந்திச் சனியனை வேறொரு வழியில் கொண்டுவருகின்றனர். இந்தி விஷயத்தில் சர்க்கார் இந்தப் போக்கையே கடைபிடித்தால் கடியவிரைவில் மகத்தானதோர் போராட்டம் நாம நடத்தியே தீருவோம். குடந்தையிலே குருதி கொட்டப் போராடியவர்கள் நாம். எனவே, போராட்டம் நமக்குப் புதியதல்ல. ஆகவே, சர்க்கார் தங்கள் போக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும். இதனை தன்மையை உணர்ந்து சர்க்கார் திருந்துவதே நலம்.

சொந்தப்புத்தியும் இல்லை! சொல்புத்தியும் இல்லை!!

சமீபத்தில் வெளியான ஆனந்தவிகடனில் எஜமான், வேலைக்காரன் என்ற படத்தின் மூலம், இன்றைய ஆளவந்தாரை எல்லாம் சொந்தப் புத்தியும் சொல்புத்தியும் இல்லாதவர்கள் என்று எழுதியிருக்கிறது. இதற்கு என்ன பொருள் என்று எங்களுக்கே புரியவில்லை! இவ்வளவு கடுமையாக நாம் சொல்லவில்லை. தேசியத் தோழர்களே இது போன்று சொல்லிக்கொள்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. இன்றைய மந்திரிகளில் பலர் திராவிட மந்திரிகளாக இருப்பதால், அவர்கள் மீது நாங்கள் பச்சதாபப் படுகிறோம். எனவே வீணாக இதுபோன்ற விஷயத்தில் தலையிட்டு நமது மந்திரிமார்கள் பொது மக்களின் வெறுப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டாம்.

டி. கே. சீனிவாசன்

எனக்கு முன் பேசிய நண்பர், இந்தச் சர்க்காருக்கு அணவம்தான் இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை என்று சொன்னார். உண்மையிலேயே இந்தச் சர்க்கார் மக்களின் சர்க்காராக இருந்திருந்தால், தி. மு. கழகத்தின் சவாலை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். கேட்ட கேள்விகளுக்கு நல்ல பதிலைத் தந்திருக்க வேண்டும். குற்றச் சாட்டுகளைக் கேட்டுக், கேட்டுச் சலித்துப்போன சர்க்கார், கல்மனதும், கல் உருவமும் கொண்ட சர்க்கார் பதில் தராததுதான். பதில் தருவதற்குப் பதிலாக, நாம் சர்க்காருக்கு எதிராக பிரசாரப் செய்வதாகக் கூறி தடபித்துக் கொள்ளப் பார்க்கிறது இன்றைய சர்க்கார். நாம் எந்த விதமான குற்றச் சாட்டைக் கூறி, குற்றவாளிக் கூண்டில் ஏற்றினாலோ அதை மறுக்காமல், ஏதேதோ சொல்லித் தடபித்துக்கொள்கின்றனர்.

பட்டினியும் பசியும் ஏன்?

உதாரணமாக மக்கள் பட்டினியால் துடிக்கின்றனரே, பசிக்கொடுமை தாங்காமல் வாடுகின்றனவே இதை ஒழிக்க சர்க்கார் செய்ததென்ன என்று கேட்டால், "பட்டினியும், பசியும் இல்லவே இல்லை மக்கள் நாள் ஒன்றுக்கு ஆறு அவுன்ஸ் கடலை சாப்பிடுகிறார்கள். மீதி இருக்கும் உணவு பொருள்களைக் கள்ளமார்க்கெட்டில் விற்கிறார்கள்" என்று காமராஜர் சொல்லுகிறார்.

தமிழை ஏன் கெடுக்கிறீர்கள் என்றால், 'நாங்களா தமிழைக் கெடுத்தோம், இல்லையே' என்று கூறிக்கொண்டே பொன்மலை என்றிருந்ததை, 'போன் மலை' என்றும், 'வெள்ளியங்கிரி' வேளியங்கிரியாகவும் இந்தியில் மாற்றியிருப்பதைக் காட்டுகிறார்கள் (வெட்கம்—வெட்கம்) அது மட்டுமல்ல. "திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், நாட்டிலே நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மக்களைப் பற்றிய அக்கறை இருப்பதில்லை" என்றும் கூறுகிறார் காமராஜர். நான் கூறுகிறேன், வடநாட்டிற்கு இந்தச் சர்க்கார் காட்டியமாகும் போது, வெளிநாட்டு முன் மத்தியசர்க்கார் கதகளி நடனம் ஆடும்போது, நாங்கள் அறிவுப் பிரசாரம் செய்ய நாடகம் நடத்துவதில் தவறென்ன இருக்க முடியும்? அது தான் போகட்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் நீங்கள், பதவி உங்கள் கையில், போலீஸ், சட்டம் எல்லாம் உங்கள் கையில் இருக்கும் போது, திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்றால், கல்யாணம் செய்துகொண்டவன், அது ஆகாதவனைப் போய் 'நீ ஏம்பா இன்னும் குழந்தை பெறவில்லை, என்று கேட்பது போல் அல்லவா இருக்கிறது. உண்மையிலே குழந்தையைப் பெறவேண்டியவர் காமராஜர் தானே! (பலத்த கைதட்டல்)

ஒற்றுமை!

உங்களை 2000 ஆண்டுகட்கு பின்னே அழைத்துச்செல்ல விரும்புகிறேன். பிரஞ்சு நாட்டிலே லூயி என்றமன்னன் அரசாட்சி செய்து வந்தான். அவன் நாட்டிலே வறுமை நிறைந்த மக்கள், காய்ந்த வயிற்றுக்காரர்கள் இருக்கத்தான் செய்தனர். பசி, பட்டினி நாடெங்கும் பரவிற்று. ஆகவே, அந்த ஆட்சியைக் கொடுங்கோல் ஆட்சி என்றனர். எனவேதான், பிரெஞ்சு நாட்டு லூயி சர்க்காருக்கும், நம்ம சர்க்கார் ஆட்சிக்கும் உள்ள ஒற்றுமையைப் பாருங்கள். பிரெஞ்சு நாட்டிலே பசி, பட்டினி. இங்கே இராமநாதபுரம் ஜில்லாவில் பட்டினி! மக்கள் ஊரைவிட்டே வெளியேற்றம். லூயி ஆட்சியில் ஜமீன்தாரர்களும், குறுநில மன்னர்களும் இருந்ததுபோல, இங்கேயும் உள்ளனர். அங்கே அறிவுப் புரட்சிசெய்ய வால்டேர் தோன்றினார். இங்கே தோழர் அண்ணாதுரை அறிவுப் புரட்சி செய்கிறார். வால்டேர் புத்தகத்திற்கு லூயி சர்க்கார் தடைவிதித்தது. இங்கு 'ஆரியமாயை,' "இலட்சிய வரலாறு" தடைவிதிக்கப்பட்டது.

புராணகாலத்தில்தான்படித்தோம், பக்தர்களைக்கடவுள்பல ரூபத்தில் சோதனை செய்ததை. ஆனால் இன்றுகாங்கிரஸ் கடவுள், மக்கள் என்ற பக்தர்களை சோதிக்கின்றது. ஆனால், பிரஞ்சு நாட்டிலே மக்களின் எழுச்சிகோஷத்தால், எழுச்சியால் 'லூயி' மறைந்தான். பிரஞ்சு [illegible] நீசண்ட் மீது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது போலவேதான் இன்று மக்கள் நேரு சர்க்கார்மீது குற்றம் சாட்டுகின்றனர். பனிதரு மாணிக்கம் ஒழுக்கம்தவறிவிட்டார் என்று சொல்கிறோம் நான் இதைச் சொல்வதால் நீங்கள் சற்று கலக்கம் கொள்ளலாம்; யோசித்தால்உண்மை விளங்கும்.

மதுவிலக்கும் நேருவும்

உலகத்திலே செய்ய முடியாத ஒன்றை, தாங்கள் செய்து விட்டதாகப் பெருமை கொள்கின்றனர் காங்கிரஸ்காரர்கள். மதுவிலக்கு என்பதை யாரும் செய்ய முடியாததுதான். நேரு, அமெரிக்கா சென்ற சமயம், முதலாளிகள் ஓர் விருந்து நடத்தினர். அதில் அம்மையார் விஜயலெட்சுமி உட்பட, நேரு முதலியோர் இந்த விருந்துகளில் கலந்துகொண்டு மது அருந்தினர். இதைத்தேசிய ஏடுகள் படம்போட்டன, பல தடவை. செய்யலாமா இது போன்று என்று கேட்கிறேன். இதைத்தான் நாங்கள்கண்டிக்கிறோம். நாங்கள் இதைச் சொல்வதால், எங்களைக் கம்யூனிஸ்ட் என்று கூறுகிறது சர்க்கார். ஆளும் கட்சிக்காரர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்களை எல்லாம் கம்யூனிஸ்ட்கள் என்று கூறும் என்றும் காரல்மார்க்ஸ். இன்றைய நிலையில் இவர்கள் தவறை நாம் எப்படிச் சொல்வது? நாமே ஏழைகளின் கட்சிக்காரர்கள். ஆள் பலமில்லாத கட்சி, பண பலமில்லாத கட்சி 'இந்து' இல்லை, 'மித்திரன்' இல்லை, ரமணர்களும், சங்கராச்சாரியார்களும் நம்மிடமில்லை இப்படிப்பட்டவர்களாகிய நம்மைக் கண்டு சகல வசதிகளும், சம்பத்தும்உள்ள கட்சி ஏன பயப்படவேண்டும்?

'ஆகஸ்டுத் தனம்'

கம்யூனிஸ்டுகளைப் போன்று பலாத்காரத்தில் இறங்கவில்லை, தண்டவாளத்தைப் பிடுங்கவில்லை, தபால் பீஸ்களைக் கொளுத்தவோ, தந்திக்கம்பிகளைப் பிடுங்கவோ இல்லை. செய்தால் வடநாட்டுப் பிர்லாக்களுக்கோ, டாடாக்களுக்கோ, லால்சந்த், ஹீராசந்த்களுக்கு நஷ்டம் இருக்க முடியாது. தண்டவாளத்தைப் பிடுங்குவதால், டாடா கம்பெனிக்கு லாபமே தவிர, நஷ்டமில்லை என்பதை நாங்கள் அறிவோம். அறிந்தேதான், நாட்டிலே அறிவுப் பிரசாரம் செய்கிறோம். எங்கள் பிரசாரத்தால் யாருக்கேனும் நஷ்டம் ஏற்பட்டிருக்காது. அப்படியே இருந்தால், அய்யர் இன்றி திருமணம் நடைபெற்றிருக்கும்

புற்றுநோய் கண்ட கடவுள்

இந்த நாட்டுப் பத்திரிகைகள் சாதாரண ஒரு பார்ப்பனரை ரமணராக்கியும், கடவுளாக்கியும் விளம்பரம் செய்தன. இந்தக் கடவுளுக்குத்தான் புற்றுநோய் கண்டு மாண்டார்! மாண்டவுடன் 'பகவான் மறைந்தார்' என்று எழுதினார்கள். பகவான் சாகலாமா? செத்தாலும் இந்தப் பத்திரிகைகள் "பகவான் ரமணர் செத்தார்" என்று செய்தி போடலாமா? (கைதட்டல்) என்று கேட்கிறேன்.

தியாகிகள் பரம்பரை நாம்!

தியாகராயர் பரம்பரைநாம், நாயர் வகுத்த வழியைப்பின் பற்றுபவர் நாம், தமிழகம் காக்க சிறைச்சாலையில் உயிர் நீத்த தாளமுத்து—நடராசன் கால்வழி நாம். திராவிட மக்களுக்காக வெளிநாடு சென்று வாதாட முனைந்து ஓமான் கடலிலே மறைந்த பன்னீர் செல்வம், கொண்ட லட்சியத்திற்காக, மரக்கிளையிலே பிணமாகத் தொங்கிய மாவீரன் வேலாயுதம், இயக்கத்திற்காக உழைத்து—உழைத்து உருக்குலைந்து அதன் பயனாய் க்ஷயநோய் பிடித்து மாண்ட கர்மவீரன் அழகிரிகள் நமது நண்பர்கள். இவர்கள் வழிவந்த நாம், நமது இலட்சியத்தை நோக்கி முன்னேறுவோம்.

இரா. நெடுஞ்செழியன்

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் சுமார் 1-15 மணிநேரம் மாநாட்டுத் தலைவரைப்பற்றியும், மற்றும் மக்கள் நிலைபற்றியும் பேசினார். அதுபோது அவர் குறிப்பிட்டதாவது "தலைவர் தோழர் சம்பத், இங்கு குழுமியுள்ள பல பெரியோர்களைவிட சிறியவர்தான். நாங்கள் ஆண்டிற்கு முதலிடம் தருவதில்லை. அறிவிற்குத்தான் ஆற்றலுக்குத்தான் முதலிடம் தருகிறோம். மாநாட்டிற்குத் தலைமை வகித்துள்ள நண்பர் சம்பத் பிறந்ததுமுதல், இன்றுவரை இலட்சிய ஒலிகளை அவர்கள் காதுகளில் விழ வளர்ந்தவர். சென்ற ஆண்டில் நம்மையே சோதனை செய்யும் கட்டம் வந்தது அப்போது நமது சம்பத் அவர்கள். எப்படி நடந்துகொண்டார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் முன்னால், பணம், பதவி, அந்தஸ்து எல்லாம் வைக்கப்பட்டது. இவைகளைக் கண்டு அவர் ஏமாறவில்லை. மாறாக, கலங்கிய கண்களுடன் வீட்டை விட்டு வெளியே வந்தார். அவர் விரும்பினால், ஓர் சம்பத்தாக ஆகி இருக்கலாம். மாறாக அவர் ஒரு குழுக்காரர் என்று பழிக்கப்பட்டார். கடமையைச் செய்ய வேண்டுமென்ற பண்பும், திறமையும்அவரிடம் நிறைய இருப்பதால் தான், இன்று அவர் நம்முடன் நற்பணி செய்ய முன் வந்துள்ளார்.

வசதிகள் இல்லை

நம்மிடம் போதிய பண வசதியோ, படை வசதியோ, பத்திரிகையோ இல்லை ஆனால் நமது கழகம் வளர்கிறது. மந்திரியாக இருக்கிறவர்கள் வசதிகள் நிறையப் பெற்றவர்கள், சமீபத்தில் கோவையில் கூடினார்கள், தமிழ் வளர்ச்சி மாநாடு என்ற பெயரால், 16000 ரூ செலவழித்து. கட்டணம்கிடையாது மாநாட்டிற்கு. சாப்பாடு உண்டு. கார் உண்டு அழைத்துவர. ஆனாலும், கூடிய மக்கள் மொத்தம் 500 பேர்! அதே வாரம் அதே கோவையில் முத்தமிழ் மாநாடு கூட்டினோம் நாம். கட்டணம்உண்டு, கார் இல்லை வசதியில்லை உ[illegible]வில்லை. இருந்தும் 25 ஆயிரம் பேர்கள் கூடினார்கள் என்[illegible] இது எதைக் காட்டுகிறது? நாமும் மேனுமின[illegible] கிடையாது, பவனிவரும் சந்நிதி குருக்கள் இல்லை, அப்படி இருந்தும் கூடினார்கள் என

(4-ம் பக்கம் பார்க்க)

லூயி மன்னன் ஆட்சி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருல் நமது கொள்கை நேர்மையானது என்பதல்லாமல்வேறு என்னவாக இருக்கமுடியும்?

மூன்று துறையிலும்...!

நாம் நாடகம் நடித்தால் நடிக்காதே என்கிறது சர்க்கார். புத்தகம் எழுதினுல், எழுதாதே என்று சொல்கிறது, நூல்களைப் பறிமுதல் செய்கிறது. பத்திரிகைகளுக்குத் தடை விதித்திருக்கிறது, ஜாமீன் கேட்கிறது. இவ்வளவு இன்னல்களுக்கிடையே இன்று இவ்வளவு ஆயிரக்கணக்கான மக்கள் மிக ஆர்வத்தோடுகூடி இருக்கின்றீர்கள். இயக்கம் வளருகிறது—இன்பத் திராவிடம் உருவாகிறது. இதைத்தான் சர்க்கார் சருக்கெழுத்தாளர் சர்க்காருக்கு எடுத்துரைக்க வேண்டும். ஆகஸ்டுத்தனம் செய்யவோ, அதிகாரிகளை மிரட்டவோ இல்லை நாங்கள். நாங்கள் செய்வதெல்லாம் அறிவுப் பிரசாரம்தான். அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய கொள்கைகளை நாட்டு மக்களிடையேவிளக்குகிறோம். நல்ல தீர்ப்பு நாடி நிற்கிறோம். மூன்று துறைகளிலும் முன்னேற்றம் வேண்டுமென்கிறோம்

கல்லூரி காணமுடியாது

பெரும் கல்லூரிகளைக் கட்டி, அங்குள்ள மாணவர்களிடம் பிரசாரம் செய்ய எங்களால் முடியாது, கையிலே பணமில்லாத காரணத்தால் எனவேதான், இது போன்ற மாநாடுகளை கல்லூரிகளாகஆக்கிக்கொள்ளுகிறோம் உங்கள் முன்னிலையில் நாங்கள் ஆசிரியர்களாகவும், உங்களை மாணவர்களாகவும் கொண்டு உங்கள் முன் நிற்கிறோம். நாங்கள் கூறிடும் கருத்து என்றைக்கேனும் ஒரு நாள் வெற்றிபெறறே தீரும். இது உறுதி; கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் சொல்லிவந்த கருத்துக்கள் தான் இன்று சட்டமாக்கப் பட்டுவருகிறது. நாட்டில் உள்ள பத்திரிகைகள் எங்களுக்காக எழுதினுல், வானொலி பேசினுல் தடை இன்றி எங்கள் கூட்டம் நடைபெற்றுல், எவ்வளவு சீக்கிரம் நாம் முன்னேறுவோம் என்பதை எண்ணிப்பாருங்கள் இப்பொழுதே காங்கிரஸ்காரர்கள் பலர் திருந்திவிட்டனர். இன்னும்சில, பலமாதங்களில் எலிவளை எலிகளுக்கே, என்று கிண்டல் செய்த கூட்டம்கூட, தனது தவறை உணர்ந்து நம்மை ஆதரிக்கத்தான் போகின்றன.

ஒரு நாளைக்கு?

நம்முடைய கருத்துக்கள் நேர்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதிலே சூழ்ச்சியோ, சூதோ கிடையாது. இன்று நம்மை எதிர்த்து ஏளனம் செய்வோரெல்லாம், நிச்சயம் ஒரு நாளைக்கு நம்மை—நம் கொள்கைகளை உணர்ந்து வெட்கப்பட்டுத்தான் செய்வார்கள் வேண்டுமானுல் இன்னும் ஐந்தாண்டு, பத்தாண்டு அல்லது ஐந்நூறு ஆண்டுகள்செல்லலாமேதவிர, கொள்கை என்றும் மாறாது. எனவே இன்று இங்கு பேசப்படும் கருத்துக்களைப் பட்டிதொட்டிகளில் உள்ள மக்களிடம் சென்று சொல்லும் தூதுவர்களாக, நீங்கள் இருக்கவேண்டும். அப்பொழுதுதான், நமது கொள்கை வெற்றிபெற முடியும். பழமை ஒருபுறம், சர்க்கார் ஒருபுறம் நம்மீது தாக்குதல்கள் நடத்தலாம், இதைச் சமாளிக்கவே இது போன்ற மாநாடு கூட்டியுள்ளோம். சரித்திரப் பிரசித்திப் பெற்ற இந்த நகரில் கூடியுள்ள நாம், வரப்போகும் சரித்திரத்தில் இதைத் தீட்டவேண்டும்.

அடக்கு முறைகளைக் கையாண்ட எந்த ஆட்சியும் நிலைத்ததில்லை. எனவே, ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, அடக்கு முறையை அணியாகக்கொண்டுள்ள ஆட்சியும் நெடுநாள் இராது. கட்டாய இந்தி என்ற நங்கை, நம்மைக் கரம் பிடிக்க நினைக்கும் இந்த வேளையில், இங்கு கூடியுள்ளோம் அதற்கு இந்த மாநாடு நல்லவழிகாட்ட வேண்டுகிறேன் என்று கூறி "பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியேவா" என்று ஆயிரமாயிரம் இளைஞர்களை அழைத்து, புரட்சிக் கவிஞரின் பாட்டினைப்பாடி தன் பேச்சை முடித்துக்கொண்டார்.

நாளை!

பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்களின் மதுரை மாநாட்டு சொற்பொழிவு நாளை வரும்.

குழந்தையாருடையது?

பிரிவு கவுன்சிலில் விசித்திர வழக்கு

சிட்னி, ஜூன் 14—

உலக கவனத்தைக் கவர்ந்த ஒரு ருசிகரமான வழக்கு பிரிவு கவுன்சில் முன்வரவிருக்கிறது. குழந்தை யாருடையது என்ற பிரச்னை எழுப்பப்படும். இவ்வழக்கில் வாதிப்பதற்காக இரு பிரபல ஆஸ்திரேலிய பாரிஸ்டர்கள், இங்கு வரவிருக்கின்றனர். இவ்வழக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து வரப்பட்டுள்ளது.

1945-ல் விக்டோரியாவிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் இரண்டு குழந்தைகள் பிறந்தன. பிரசவித்தவர்களில் ஒருவரான தோழியர் மார்லன் தன்னிடம் கொடுக்கப்பட்டது, வேறொருவரின் குழந்தை என்றும், ஆகவே தன் குழந்தை தன்னிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும் என்கிற பிரச்னையை எழுப்பினர். பிரசவித்த மற்றொரு பெண், இதை ஆட்சேபித்தார். இவ்வழக்கை விசாரித்த விக்டோரியா சுப்ரீம்கோர்ட், குழந்தை மாறிவிட்டது என்றும், ஆகவே தோழியர் ஜென்கின்ஸிடம் உள்ள குழந்தையைத் தோழியர் மார்லனிடம் விட்டுவிட வேண்டும் எனத் தீர்ப்பு அளித்தது.

இத்தீர்ப்பை மற்றொரு கோர்ட் மாற்றியது. இதை ஆஸ்திரேலியா ஹைகோர்ட் ஊர்ஜிதம் செய்து, ஜென்கின்ஸ் தம்பதிகளுக்கு சாதகமாக தீர்ப்புகூறியது. ஆகவே, மார்லன் தம்பதிகள் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய உத்தேசித்திருக்கின்றனர்.

பாட்னுவுக்கு டிராலி பஸ்கள்

பாட்னு, ஜூன். 14—

பாட்னுவின் தெருக்கள் குறுகலாக இருப்பதன் காரணத்தினால், டிராம்சர்வீஸ் ஏற்படுத்துவது என்ற யோசனை கைவிடப்பட்டுவிட்டது. அதற்குப் பதில், டிராலி பஸ்களை விடுவதென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதை ஏற்படுத்த முன்வந்துள்ள கம்பெனி 51% பங்குகளை சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

இந்த டிராலிபஸ்கள் ஷெப்பீல்ட் கம்பெனி ஒன்றிலிருந்து வரவழைக்கப்படுமாம். முதன் முதலில் 25 பஸ்களுடன் சர்வீஸ் ஆரம்பிக்கப்படும்.

வயிற்றில் விஸ்கி புட்டிகள்

சென்னை, ஜூன் 12—

சனிக்கிழமையன்று எழும்பூரில் ஒரு பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்று கொண்டிருந்த சீனிவாசன் என்னும் 30 வயதுள்ள திண்டிவனத்தைச் சேர்ந்த ஒலக்கூர் கிராம வாசியை, பூக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கள்ளச் சாராயம் வைத்திருந்ததாகக் கைது செய்தார். அம்மனிதன் நடக்கையில் விபரீதமாகவிருந்ததால், சந்தேகித்தபோது வயிற்றில்வெண் துணியால் ஸ்காட் விஸ்கி புட்டிகளைக் கட்டிக்கொண்டு, மேல் துணியால் மறைத்து வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. கள்ள விஸ்கி சரக்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

மேட்டூர் நீர் மட்டம்

திருச்சி, ஜூன். 12—

சென்றவாரம் 17 அடி உயரமிருப்பதாக அறிவிக்கப்பட்ட மேட்டூர் நீர்த்தேக்க நீர்மட்டம், இதுவரை இரண்டு அடி அதிகரித்திருக்கிறது. இன்றைய நீர்மட்ட அளவு 19 8 அடி.

மழை சரிவரப் பெய்யாததால், எதிர்பார்த்தபடி நீர்மட்டம் அதிகரிக்கவில்லையெனினும், திருப்திகரமான முறையில் அதிகரித்திருக்கிறது. இதனுல், இந்தப் பகுதியில் மின்சார சப்ளை கட்டுப்பாடு தளர்த்தப்படுவது இன்னும் சந்தேகமாயிருக்கலாம்.

கூட்ஸ் வண்டியில் திருட முயற்சி

சென்னை, ஜூன் 12—

கடந்த வெள்ளிக்கிழமையன்று இரவு 12-மணிக்கு, திருவள்ளூர் ஸ்டேஷனில் ஒரு கூட்ஸ் வண்டித் தொடர் நின்றுகொண்டிருக்கும்போது, வில்லிவாக்கம் வாசியான 20 வயதுள்ள தர்மலிங்கம் என்பவன் ஒரு வாகனில் திருட முயற்சிக்கையில் சென்ட்ரல் ஸ்டேஷன் ரயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் விபீஷணம் அவனைக் கைது செய்ததாகச் சொல்லப்படுகிறது. கைதியான தர்மலிங்கம், சுமார் இரண்டு வருடங்களாக போலீசாருக்கு அகப்படாமல் தலைமறைவாக இருந்து வந்ததாயும் சொல்லப்படுகிறது. கைதியான மனிதனை சனிக்கிழமையன்று திருவள்ளூர் ஸ்டேஷனில் சப் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தபோது மாஜிஸ்திரேட் விசாரணை முடியும்வரையில் காவலில் வைக்க உத்திரவிட்டார்.

லண்டனில் குஷி வாரம்

மாஞ்செஸ்டர், ஜூன் 13—

ஜூன் 13உ முதல் 17உ வரை எல்லோரும் புன்சிரிப்புடன் குஷியாக காட்சியளிக்கவேண்டும் என்ற இயக்கம், இங்கு ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இந்த வாரம் முழுவதும் குஷியாக இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாம், வருடத்தில் ஒரு வாரம் இப்படி குஷியாகக்கழித்தால் தொழிலாளர்கள் நன்கு வேலைசெய்வர் என்று லார்ட் மேயர் கூறினர்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

16 - 6 - 50

சுண்டக்காமுத்தூர் (கோவை):—சி. பி. சிற்றரசு.

மாயவரம்:—சி. என். அண்ணுத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

17 - 6 - 50

திருவாரூர்:—சி. என். அண்ணுத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

18 - 6 - 50

விருதுநகர்:—சி. பி. சிற்றரசு.

திருநெல்வேலி:—என். வி. நடராசன்.

நாகை: சி. என். அண்ணுத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என் எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்.

குலாலம்பூருக்கு - நேரு வருவார்

பினங்கு, ஜூன் 13—

இந்தியாவின் முதல் மந்திரி பண்டித நேரு, இந்தியக் கொடிக் கப்பல் டில்லியில் இம்மாதம் 19-ந் தேதிபினங்கு வந்து சேருகிறார். அவர் பினங்குக்கு வருமுன், குலலம்பூருக்கு செல்வார் என்று, இந்திய சர்க்கார் ஏஜெண்டு தோழர் எஸ். ஜி ராமச்சந்திரன் கூறினர் தனிப்பட்ட முறையில், பண்டித நேருவை வற்புறுத்தி அழைப்புகள் வந்திருக்கின்றனவாம்.

இலங்கை சர்க்காரின் சிக்கன யோசனை

சிப்பந்திகள் சம்பளங்களை பரிசீலக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன். 13—

இலங்கை சர்க்கார் சிப்பந்திகள் சம்பளத்திற்காக ஆகும் செலவு மிகவும் அதிகமாவது, இலங்கைசர்க்காருக்குக் கவலையளித்துவருகிறது. இச்சம்பளங்களைப் பரிசீலனை செய்யவும் நிர்வாக சிக்கன யோசனைகளைத் தெரிவிக்கவும், ஒருவர் கொண்ட கமிஷனை சர்க்கார் நியமிக்கும் எனத் தெரிகிறது. சர்க்கார் அதிகாரிகளின் பிரயாணப்படி ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளது.

விசித்திர உயில்

லண்டன், ஜூன். 13—

விம்பில்டனைச் சேர்ந்த ஆர்தர் ஜான் எட்வர்ட் பிராம்ல் என்பவர், ஒரு உயில்எழுதிவிட்டுச்சென்றிருக்கிறார். அதில், தன் உடலை வைத்ய ஆராய்ச்சிக்குபயன்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தான் ஒரிஜனல் பிரதி ஒன்றை தன்மகனுக்குக்கொடுக்கும்படி தவிர எழுதியிருக்கிறார்.

இனி நடப்பவை

ஆரணி:—16-6-50 இரவு ஆரணி செலமய்ய முன்சாமி செட்டித் தெருவில், திருவள்ளுவர் நாடக மன்றத்தின் சார்பாக, சீர்திருத்த நடிகர் குழுவால், சீர்திருத்தவாதி என்ற பிரச்சார நாடகம் நடைபெறும்.

* * *

மாயூரம்:—16-6-50 வெள்ளியன்று மாலை 6 மணிக்கு, நகராண்மைக் கழகப் பூங்காவில், தோழர் வை. மாணிக்கம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணுத்துரை, ஈ. வி. கே. சம்பத், வி. பழனிச்சாமி, கே. கே. நீலமேகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

தோழர் பி. என். நாடுவுக்கு புது பதவி

புதுடில்லி, ஜூன் 14—

பிரதேச வேலை தேடித்தரும் ஸ்தாபன அதிகாரியான தோழர் பி. என். நாடு, தொழில் மந்திரி இலாகாவில், மேற்பார்வை உதவி டைரக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வேண்டுகோள்

இதுவரை திராவிட முன்னேற்றக் கழக தலைமை நிலைய கட்டிட நிதிக்கு, பணம் அனுப்பாத கிளைக்கழகங்களும், தோழர்களும் தயவுசெய்து அவரவர்கள் பங்கைப்பொதுச் செயலாளரிடம், தஞ்சை மாவட்ட சுற்றுப்பிரயாணத்தின்போது, பொதுக்கூட்டங்களில் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

கே. கே. நீலமேகம்

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர்

தாராபுரம் தொகுதியில்

30—6—50ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சைப் பெட்டியில்

தயவுசெய்து ஓட்டுபோடவும்

(விளம்பரம்)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.